# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்

---

(1996, ஒகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1996, ஒகத்து மாதம் 23 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 16.00 தபாற் செலவு : ரூபா 7.50

# 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்

[1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ.—ஓ. 12/94

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை தாபிப்பதற்கும் ; ஏற்பாடு செய்வதற்கும் ; அத்தகைய ஆணைக்குழுவின் தத்துவங்களையும் பணிகளையும் குறித்துரைப்பதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இச்சட்டமானது, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

## பாகம் I

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் தாபித்தல்.

*இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் தாபித்தல்.*

2. (1) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என அழைக்கவும் அறியவும்படவேண்டியதான ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) ஆணைக்குழுவானது, இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றையுமுடைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழுவின் செயலாளரது கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அது மாற்றவும்படலாம்.

*ஆணைக்குழுவின் அமைப்பும் பதவிக்காலமும், ஏனையவையும்.*

3. (1) ஆணைக்குழுவானது மனித உரிமைகள் தொடர்பிலான கருமங்களில் அறிவு அல்லது செயல்முறை அனுபவம்கொண்ட ஆட்களிடையே இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மேல் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆயினும், எவ்வாறாயினும் நியமிக்கப்பட்ட திகதியன்று தொடங்கி அரசியலமைப்புப் பேரவை தாபிக்கப்பட்ட திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடனான கலந்தாலோசனையுடன் பிரதம மந்திரியின் விதப்புரையின்மேல் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

CM 012401—2,000 (2010/11)

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் விதப்புரைகளைச் செய்வதில், அரசியலமைப்புப் பேரவையும் பிரதம மந்திரியும் ஆணைக்குழுவில் சிறுபான்மையினரும் பிரதிநிதித்துவம் பெறுவதற்கான அவசியத்தைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

(4) அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக இருப்பதற்கென சனாதிபதியால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், மூன்றாண்டுகளைக் கொண்டவோர் காலப்பகுதிக்குப் பதவிதாங்குதல் வேண்டும்.

(6) உறுப்பினரொருவரின் பதவி —

(அ) அத்தகைய உறுப்பினரின் இறப்பின்மீது;

(ஆ) அத்தகைய உறுப்பினர் சனாதிபதிக்கு முகவரியிட்டெழுதுவதன் மூலம் அத்தகைய பதவியைத் துறப்பதன்மீது;

(இ) அத்தகைய உறுப்பினர் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின்மேல் பதவியினின்று அகற்றப்படுவதன்மீது அல்லது

(ஈ) அவரது பதவிக்காலம் முடிவுறுவதன்மீது வறிதாதல் வேண்டும்.

உறுப்பினர்களை அகற்றுதற்கான ஏற்பாடுகள்.

4. (1) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் —

(அ) (i) அவர் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம்கொண்ட நீதிமன்றமொன்றினால் கடனிறுக்க வகையற்றவரென நியாயந்தீர்க்கப்படின்;

(ii) சபாநாயகருடனும் எதிர்க்கட்சித் தலைவருடனுமான கலந்தாலோசனையின் பின்னர் பிரதம அமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியின் அபிப்பிராயப்படி ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் என்றவகையில் அவரது கடமைகளுடன் முரண்படுகின்றனவான அவரது பதவிக்குரிய கடமைகளுக்கு வெளியே ஏதேனும் கொடுப்பனவுக்குரிய தொழிலில் ஈடுபடுவாராயின்;

(iii) மனம் அல்லது உடல் வலிமையின்மை காரணமாக பதவியில் தொடர்ந்திருக்கத் தகுதியற்றவராயின்;

(iv) தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவராக வெளிப்படுத்தப்படுவாராயின்;

(v) ஒழுக்கச் சீர்கேடுகள் சம்பந்தப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவாராயின்,

(vi) ஆணைக்குழுவின் விடுப்பைப் பெற்றுக்கொள்ளாமல் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காதிருப்பாராயின்; அல்லது

(ஆ) எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது ஆற்றலின்மை அவர்பால் உள்ளது என்ற ஏதுவின்மீது அகற்றும்படி கூறும் பாராளுமன்றப் பிரேரணையொன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மையினால் (சமுகமளிக்காதோர் உட்பட) ஆதரவளிக்கப்பட்டு சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன்பின்னர் சனாதிபதியினால் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலம்;

அவர் சனாதிபதியினால் பதவியினின்று அகற்றப்படலாம்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் எதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரால் கையொப்பமிடப்பட்டிருப்பதோடு, சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது ஆற்றலின்மை பற்றிய முழு விபரங்களையும் கொண்டிருந்தாலன்றி, சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் ஆகாது அல்லது பாராளுமன்ற நிகழ்ச்சித் தாளில் இடப்படுதல் ஆகாது.

(2) உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவரை அகற்றுவதற்காகப் பாராளுமன்றப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் நிறைவேற்றுவதற்குமான நடவடிக்கைமுறை ஆணைக்குழு உறுப்பினரொருவரை அகற்றுவதற்காகப் பாராளுமன்றப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் எல்லா அம்சங்களிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

மறுநியமனத்திற்கான தகுதி.

**5**. நாலாம் பிரிவின்கீழ் அகற்றப்படுவதன்மூலம் தவிர தமது பதவியை வறிதாக்கும் உறுப்பினர் எவரும் மறுநியமனத்திற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

பதவி துறத்தல் முதலியன.

**6**. (1) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளரின் பதவிக் காலம், ஆணைக்குழுவில் அவரது உறுப்பாண்மையின் காலப்பகுதியாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது தற்காலிகமாக இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதிருப்பதன் காரணமாக, தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதிருப்பின் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென ஆணைக்குழுவின் வேறு எவரேனும் உறுப்பினரை சனாதிபதி நியமிக்கலாம்.

ஏதேனும் வெற்றிடம் முதலியன காரணமாக ஆணைக் குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலாகாது.

**7**. ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே ஏதேனும் வெற்றிடம் உளது அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் குறைபாடுளது என்ற காரணத்தினால் மட்டும் ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலாகாது.

உறுப்பினர்களின் வேதனம்.

**8**. ஆணைக்குழுவின் உறுப்பினர்களது சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சம்பளங்கள் திரட்டு நிதியத்திற்குப் பொறுப்பிக்கப்படலும் வேண்டும்; அத்துடன் அவர்களது பதவிக்காலத்தின் போது இவை குறைக்கப்படுதல் ஆகாது.

ஆணைக் குழுக் கூட் டங்கள்.

9. (1) ஆணைக்குழுவின் தவிசாளரே அதன் பிரதம நிறைவேற்று அலுவலராதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் எல்லாக் கூட் டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். அவர் ஏதேனும் கூட் டத்திற்குச் சமூகமளிக்காதவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமூகமா யிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கு வதற்கு அவர்களிடையேயிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தின் தவிசாளர் தமது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடைய வராதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைவாக, ஆணைக்குழு வானது ஆணைக்குழுக் கூட்டங்களை நடாத்துதல், அத்தகைய கூட்டங் களில் அலுவல்களை நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

ஆணைக்குழு வின் பணிகள்.

10. ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்.

(அ) அடிப்படை உரிமைகள் தொடர்பிலும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் அவற்றை அனுசரித்தல் என்பவற்றை ஊக்குவித் தல் தொடர்பிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் நிறை வேற்றுத்துறை மற்றும் நிர்வாகத்துறை செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் கண்காணித்தல் ;

(ஆ) அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப் படவுள்ளமை என்பன தொடர்பிலான முறைப்பாடுகளையிட்டு விசாரணை செய்தலும் புலனாய்வு செய்தலும் அத்துடன் இதன கத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கிணங்க மத்தியஸ்தம் மூலமும் இணக்கத்தின் மூலமும் அவற்றை தீர்ப் பதற்கு ஏற்பாடு செய்தலும் ;

(இ) அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லுவதிலும், ஊக்குவிப்பதிலும் பாதுகாப்பதிலும் சட்டவாக்க, நிர்வாகப் பணிப்புரைகளையும் நடபடி முறைகளையும் தொகுத்தமைப்ப தில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும், உதவுதலும் ;

(ஈ) தேசியச் சட்டங்களும் நிர்வாகச் செயல்முறைகளும் சர்வதேச மனித உரிமைகளுக்கும் வழமைகளுக்கும் நியமங்களுக்கும் அமைந்ததாயுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு எடுக் கப்படவேண்டிய வழிமுறைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தல் ;

(உ) மனித உரிமைகள் துறையில் பொருத்தனைகளுக்கும் வேறு சர்வதேசச் சாதனங்களுக்கும் ஒப்பளிப்பதற்கான அல்லது இசைவதற்கான அவசியத்தின்மீது அரசாங்கத்திற்கு விதப் புரைகள் செய்தல் ; அத்துடன்

(ஊ) மனித உரிமைகள்பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தலும் அது தொடர்பிலான கல்வியை ஏற்பாடு செய்தலும்.

ஆணைக்குழுவின் தத்துவங்கள்

11. ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு பின்வரும் தத்துவங்கள் எதனையும் அல்லது அவை அனைத்தையும் பிரயோகிக்கலாம் —

(அ) இச்சட்டத்தின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை எதனையும் புலனாய்வு செய்தல் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் அவர்களுக்குக் கையளிக்கக்கூடியவாறான ஆணைக்குழுவின் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினதான உபகுழுக்களை மாகாண மட்டங்களில் நியமித்தல் ;

(இ) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கும் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பிலான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையிடுதல் ;

(ஈ) நீதிமுறைக் கட்டளையொன்றினாலோ அல்லது வேறுவகையிலோ தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆட்களின் நலனை, அத்தகைய தடுப்புக் காவலிடங்களை ஒழுங்காக பரிசீலனை செய்வதன் மூலம் கண்காணித்தலும் அத்துடன் அவர்களின் தடுப்புக்காவல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய விதப்புரைகளைச் செய்தலும் ;

(உ) உயர் நீதிமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் எடுக்குமாறு பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை எடுத்தல் ;

(ஊ) நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்துவதன்மூலம் மனித உரிமைகள்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் அத்துடன் அவைபற்றிய விழிப்பு நிலையை மேம்படுத்தல் மற்றும் அத்தகைய ஆராய்ச்சியின் பெறுபேறுகளைப் பரப்புதல் அத்துடன் விநியோகித்தல்;

(எ) இன்னலுற்ற ஆள் ஒருவருக்கு அல்லது இன்னலுற்ற ஆள் ஒருவரின் சார்பில் செயலாற்றுகின்ற ஆள் ஒருவருக்கு, 13 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு ஒன்றைச் செய்வதில் அவரால் நியாயமாக உறப்படக்கூடிய செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதுமானதான அத்தகைய பணத் தொகையை அதன் பூரண தற்றுணிபில் வழங்குதல்;

(ஏ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்தல்.

## பாகம் II

### புலனாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம்

*உயர் நீதிமன்றம் ஆற்றுப்படுத்தும் விடயங்கள்.*

12. (1) உயர் நீதிமன்றம், அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் விசாரணை பொழுதின்போது எழுகின்ற ஏதேனும் விடயத்தை ஆணைக்குழுவுக்கு, விசாரணைசெய்து அத்துடன் அறிக்கை செய்வதற்கென ஆற்றுப்படுத்தலாம்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள்மீது விசாரணை செய்தலும் அத்துடன் உயர் நீதிமன்றத்துக்கு, அத்தகைய ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் காலப்பகுதிக்குள் (அவ்வாறு எதுவும் இருந்தால்) அறிக்கை செய்தலும் வேண்டும்.

*அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின் நோக்கங்களுக்காகக் காலத்தைக் கணிப்பிடுதல்.*

13. (1) நிறைவேற்று அல்லது நிருவாக நடவடிக்கைமூலம் சார்த்தப்பட்ட அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டதிலிருந்து அல்லது உடனடியாக மீறப்படக்கூடியதிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக, 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, ஆணைக்குழு முன்னர் அத்தகைய முறைப்பாடு தொடர்பான விசாரணை முடிவுறாதிருக்கும் காலப்பகுதி, அரசியலமைப்பின் 126(2) என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி அத்தகைய ஆளினால் உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ் செய்யக்கூடிய ஒருமாத காலப்பகுதியைக் கணிப்பதில் கணக்குக்கு எடுத்துக்கொள்ளப்படுதலாகாது.

(2) மேலே 12(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி விசாரணை செய்யுமாறு அல்லது அறிக்கையிடுமாறு ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் குறிப்பீடொன்றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய குறிப்பீட்டுத் திகதியன்று தொடங்குகின்றதும் ஆணைக்குழுவின் அறிக்கைத் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதி, அரசியலமைப்பின் 126 (5) என்னும் உறுப்புரையில் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டுமாதக் காலப்பகுதியைக் கணிப்பதில் கணக்குக்கு எடுத்துக்கொள்ளப்படுதலாகாது.

*சொந்தப் பிரேரணையின் பேரில் அல்லது முறைப்பாட்டின் மீது ஆணைக்குழு புலனாய்வு செய்யலாம்.*

14. ஆணைக்குழுவானது அதனது சொந்தப் பிரேரணைமீது அல்லது இன்னலுற்ற ஆளொருவரினால் அல்லது ஆட்களின் குழுவொன்றினால் அல்லது இன்னலுற்ற ஆளொருவரின் சார்பில் அல்லது ஆட்களின் குழுவொன்று சார்பில் செயலாற்றுகின்ற ஒருவரினால் அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றின்மீது —

(அ) நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கைமூலம் ;

(ஆ) எவரேனும் ஆளினால் புரியப்பட்டதும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைவதுமான செயலொன்றின் பலனாக விளைவிக்கப்பட்ட அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் குழுவின் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டது பற்றிய அல்லது உடனடியாக மீறப்படக்கூடியமை பற்றிய சார்த்துரையொன்றைப் புலனாய்வு செய்யலாம்.

மீறுகை வெளிவிடப்படாதவிடத்து அல்லது வெளிவிடப்பட்டுள்ளவிடத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை முறை.

15. (1) பதின்மூன்றாம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் புலனாய்வொன்று, நிறைவேற்ற அல்லது நிருவாகச் செயல் மூலம் அல்லது 13 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் ஆள் எவரினாலும் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டது பற்றி அல்லது உடனடியாக மீறப்படக்கூடியமை பற்றி வெளிவிடாதவிடத்து, ஆணைக்குழுவானது அந்நிகழ்வைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க முறைப்பாட்டைச் செய்கின்ற ஆளுக்கு முப்பது நாட்களுக்குள் அறிவித்தலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவினால 13 ஆம் பிரிவின்கீழ் நடாத்தப்படும் புலனாய்வொன்று, நிறைவேற்று அல்லது நிருவாகச் செயல்மூலம் அல்லது 13 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆளெவரினாலும் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றி வெளிவிடுகின்றவிடத்து, பொருத்தமாகவிருக்கின்றவிடத்து, அவ்விடயத்தை இணக்கம் செய்வதற்கென அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கென ஆற்றுப்படுத்துவதற்கு ஆணைக்குழுவானது தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவினால் 13 ஆம் பிரிவின்கீழ் நடாத்தப்படும் புலனாய்வொன்று, நிறைவேற்று அல்லது நிருவாகச் செயல் மூலம் அல்லது 13 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆளெவரினாலும் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றி வெளிவிடுகின்றவிடத்து, இணக்கத்துக்கு அல்லது மத்தியஸ்தத்துக்கு அத்தகைய விடயத்தை ஆற்றுப்படுத்துவது பொருத்தமானதல்ல என ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்றவிடத்து, அல்லது விடயத்தை இணக்கத்துக்கு அல்லது மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்துவது பொருத்தமானதென ஆணைக்குழுவுக்குத் தோன்றி, ஆனால், எல்லாத் திறத்தவர்களும் அல்லது அவர்களில் எவரேனும் இணக்கத்துக்கு அல்லது மத்தியஸ்தத்துக்கு ஆட்சேபிக்கின்றவிடத்து அல்லது இணக்கத்துக்கான அல்லது மத்தியஸ்தத்துக்கான முயற்சி வெற்றியளிக்காதவிடத்து, ஆணைக்குழுவானது —

(அ) அத்தகைய அடிப்படை உரிமையை மீறுகின்ற ஆளுக்கு அல்லது ஆட்களுக்கெதிராக வழக்குத் தொடர்தல் அல்லது வேறு வழக்கு நடவடிக்கைகள் தொடரப்படுதல் வேண்டுமெனத் தோதான அதிகாரிகளுக்கு விதப்புரை செய்யலாம்;

(ஆ) அதற்கென விதித்துரைக்கப்படக்கூடியவாறான நீதிமன்றத்தின் அத்தகைய விதிகளுக்கு இணங்கவும்; அத்துடன் அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினை எவரேனும் ஆளினால் வேண்டிநிற்பதற்கு ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளும் அத்தகைய விடயத்தை விசாரித்துத் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்டுள்ள ஏதேனும் நீதிமன்றத்துக்கு அக்கருமத்தை ஆற்றுப்படுத்தலாம்.

(இ அத்தகைய மீறுகை அல்லது, அத்தகைய மீறுகை தொடரப்படுவது தடை செய்யப்படுவதை அல்லது அவற்றுக்குப் பரிகாரம் காண்பதை நோக்கமாகக்கொண்டு, தோதான அதிகாரிக்கு

அல்லது சம்பந்தப்பட்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு, அது தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விதப்புரை களைச் செய்யலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்படக் கூடியனவான விதப்புரைகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஆணைக் குழுவானது —

(அ) அடிப்படை உரிமையொன்றின் மீறுகைக்கு அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமைக்குக் காரணமாக இருக்கும் செயல் அல்லது செய்யப்படாதுவிடல் மீள்பரிசிலனை செய்யப்படுதல் வேண்டு மென விதப்புரை செய்யலாம்;

(ஆ) அடிப்படை உரிமையொன்றின் மீறுகைக்கு அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமைக்குக் காரணமாக இருக்கின்ற முடிபானது இல்லாதாக்கப்படுதல் அல்லது மாற்றியமைக்கப்படுதல் வேண்டு மென விதப்புரை செய்யலாம்;

(இ) அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டமைக்கு அல்லது உடனடி யாக மீறப்படவுள்ளமைக்குக் காரணமாக இருக்கின்ற முடிபு, விதப்புரை, செயல் அல்லது செய்யப்படாதுவிடல், எந்தச் செயல்முறையின் அடிப்படையில் செய்யப்பட்டதோ, அந்தச் செயல்முறை மாற்றப்படுதல் வேண்டுமென விதப்புரை செய்ய லாம்; அத்துடன்

(ஈ) அடிப்படை உரிமையொன்றின் மீறுகைக்கு அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமைக்குக் காரணமாக இருக்கின்ற முடிபுக்கான, விதப்புரைக்கான, செயலுக்கான அல்லது செய்யப்படாதுவிடுத லுக்கான காரணங்கள் கொடுக்கப்படுதல் வேண்டுமென விதப் புரை செய்யலாம்.

(5) அடிப்படையுரிமையொன்றின் மீறுகை அல்லது உடனடியாக மீறப் படவுள்ளமை தொடர்பில், அத்தகைய அடிப்படை உரிமை எவ்வாளி னால் மீறப்படவுள்ளது அல்லது மீறப்பட்டிருக்கிறது எனச் சார்த்தப்படு கிறதோ, அவ்வவ்வாளுக்கு அவர் பக்க உரையைப் பகர்வதற்குச் சந்தர்ப்ப மொன்று அளிக்கப்பட்ட பின்னர் தவிர, இப்பிரிவின் முற்போந்த ஏற்பா டுகளின்கீழ் விதப்புரையெதுவும் ஆணைக்குழுவினால் செய்யப்படுதலா காது.

(6) அடிப்படையுரிமையொன்றின் மீறுகை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பில் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்படும் விதப்புரையின் பிரதியொன்று, இன்னலுற்ற ஆளுக்கு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கு அத் துடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப் பட்டிருக்கிறதோ, அவ்வமைச்சருக்கு, ஆணைக்குழுவினால் அனுப்பப்படு தல் வேண்டும்.

(7) ஆணைக்குழு இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் விதப்புரையொன்று எவ்வதிகாரிக்கு, ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு செய்யப்பட்டிருக்கிறதோ, அவ்வதிகாரியை, ஆளை அல்லது ஆட்களை, அத்தகைய விதப்புரையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள், அத்தகைய விதப்புரைக்குப் பயன்கொடுக்குமாறு அத்தகைய ஆள் எடுத்திருக்கின்ற அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற செயல்பற்றி ஆணைக்குழுவுக்கு அறிக்கை செய்யுமாறு தேவைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க ஆணைக்குழுவுக்கு அறிக்கை செய்வது, அத்தகைய ஒவ்வொரு ஆளினதும் கடமையாதலும் வேண்டும்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவ்வதிகாரிக்கு அல்லது ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு விதப்புரையொன்று செய்யப்படுகிறதோ, அவ்வதிகாரி அல்லது ஆள் அல்லது ஆட்கள், அத்தகைய விதப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை செய்யத் தவறுகின்றவிடத்து, அல்லது அத்தகைய ஆள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை செய்து, அத்துடன் அவரினால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை ஆணைக்குழுவின் கருத்துப்படி போதுமானதல்லாததாக இருக்கின்றவிடத்து, ஆணைக்குழுவானது, நிகழ்வுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றைச் சனாதிபதிக்குச் செய்தல் வேண்டும் என்பதுடன், சனாதிபதியானவர், அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்துக்குமுன் சமர்ப்பிக்கப்படச் செய்வித்தலும் வேண்டும்.

**இணக்கம் செய்வதற்கான அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கான நடவடிக்கை முறை.**

16. (1) ஆணைக்குழுவானது 14 ஆம் பிரிவின்கீழ் இணக்கத்துக்காக அல்லது மத்தியஸ்தத்துக்காக விடயமொன்றை ஆற்றுப்படுத்துகின்றவிடத்து, திறத்தவர்களுக்கிடையில் இணக்கம் செய்வதற்கு அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கு, அது ஓர் ஆளையோ அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களையோ நியமித்தல் வேண்டும்.

(2) இணக்கம் செய்பவர்களை அல்லது மத்தியஸ்தர்களை நியமிக்கின்ற முறையும், அவர்களின் தத்துவங்களும் பணிகளும் விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, இணக்கம் அல்லது மத்தியஸ்தம் செய்யும் நோக்கத்துக்காக இணக்கம் செய்பவர்களுக்கு அல்லது மத்தியஸ்தம் செய்பவர்களுக்குமுன் தோன்றுமாறு திறத்தவர்களைப் பணிக்கலாம். இணக்கங்களின் அல்லது மத்தியஸ்தங்களின் அமர்வுகள் அனைத்தும் திரைமறைவில் நடைபெற வேண்டும்.

(4) இணக்கம் அல்லது மத்தியஸ்தம் செய்தல் வெற்றியளிக்காதவிடத்து, அல்லது ஒரு திறத்தவர் இணக்கத்தை அல்லது மத்தியஸ்தத்தை ஆட்சேபிக்கின்றவிடத்து, இணக்கம் செய்பவர் அல்லது மத்தியஸ்தர், அதற்கிணங்க ஆணைக்குழுவுக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(5) இணக்கம் செய்பவர்கள் அல்லது மத்தியஸ்தர்கள் விடயத்தை இணக்கம் அல்லது மத்தியஸ்தம் மூலம் தீர்த்துவைப்பதில் வெற்றிகாண்கின்றவிடத்து, காணப்பட்ட இணக்கத்தீர்வு பற்றி, அவர்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

(6) விடயமொன்று, இப்பிரிவின்கீழ் இணக்கத்துக்காக அல்லது மத்தியஸ்தத்துக்காக ஆற்றுப்படுத்தப்பட்டு இணக்கத் தீர்வொன்று காணப்படுகின்றவிடத்து ஆணைக்குழுவானது, அத்தகைய இணக்கத்தீர்வுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை (நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கான பணிப்புக்கள் உட்பட) ஆக்குதல் வேண்டும்.

ர்நீதிமன் திற்கு றும் த்துதல்.

17. ஆணைக்குழுவினால் விசாரணையொன்று அல்லது புலனாய்வு ஒன்று நடாத்தப்படும்போது அடிப்படை உரிமை ஒன்றின் நோக்கெல்லை தொடர்பாக அல்லது விரிவெல்லை தொடர்பாக வினாவொன்று எழுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய வினாவை உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கென அரசியலமைப்பின் 125 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தலாம்.

சாரணை ன் தொடர் ான தத்து வங்கள்.

18. (1) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின்கீழான விசாரணை ஒன்றின் அல்லது புலனாய்வு ஒன்றின் நோக்கங்களுக்காக :—

(அ) தேடிக்கொள்வது அல்லது விசாரிப்பது அவசியமென அல்லது விரும்பத்தக்கது என ஆணைக்குழு எண்ணக்கூடியவாறான எழுத்திலான அல்லது வாய்மூல அத்தகைய சான்று எல்லாவற்றையும் தேடிக்கொள்வதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் சாட்சிக்காரர்களாக அத்தகைய ஆட்கள் எல்லோரையும் பரிசீலிப்பதற்கும் ;

(ஆ) எவரேனும் சாட்சிக்காரரின் (எழுத்திலானதாயினுஞ்சரி வாய்மூலமானதாயினுஞ்சரி) சான்றை சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது கொடுப்பதற்குத் தேவைப்படுத்துவதற்கும், அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரையானது சாட்சிக்காரர் ஒருவர் சட்ட நீதிமன்றம் ஒன்றில் சாட்சி கொடுக்கும்போது அவரிடமிருந்து தேவைப்படுத்தப்படும் அத்தகைய சத்தியமாக அல்லது உறுதியுரையாக இருக்க வேண்டும், அத்துடன ஆணைக்குழுவினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரினால் அத்தகைய சாட்சி ஒவ்வொருவருக்கும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவதற்கும் அதனுடன் எடுத்தோதுவிப்பதற்கும் ;

(இ) இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆளை சான்று கொடுப்பதற்காக அல்லது அவரது உடைமையில் உள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை, காண்பிப்பதற்காக ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு சமூகம் தருமாறு கட்டளையிட்டழைப்பதற்கும் சாட்சிக்காரர் ஒருவராக அவரை விசாரிப்பதற்கும் அல்லது அவரது உடைமையில் உள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்குமாறு அவரைத் தேவைப்படுத்துவதற்கும் ;

(ஈ) சான்றுக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எது எப்படி இருப்பினும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதல்லாத எழுத்திலான அல்லது வாய்மூல சான்று எதனையும்,

(உ) அத்தகைய விசாரணைக்கு அல்லது புலனாய்வுக்கு அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்குப் பொதுமக்களை அனுமதிப்பதற்கு அல்லது அவர்களை அதிலிருந்து விலக்கிவிடுவதற்கு

தத்துவமுடையதாதல் வேண்டும்.

19. (1) ஆணைக்குழு முன்னர் சாட்சியமளிக்கின்ற ஆள் ஒருவர் அத்தகைய சாட்சியம் தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் அவரால் கொடுக்கப்படும் சான்று தொடர்பாக சட்டநீதிமன்றத்தின் முன்னர் சாட்சியமளிக்கும் சாட்சிக்காரர் ஒருவருக்குள்ள எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராவர். ஆணைக்குழு முன்னரான சாட்சியம்.

(2) ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழு முன்னர் அவ்வாளினால் கொடுக்கப்பட்ட எழுத்திலான அல்லது வாய்மூல சான்று எதுவும் தொடர்பில் ஆள் எவரும் எந்நீதிமன்றத்திலும் ஏதேனும் வழக்கிற்கு, குற்ற வழக்கிற்கு அல்லது வேறு ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளாகுதல் ஆகாது.

(3) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கமைவாக ஆணைக்குழுவிற்கு அல்லது அதன் முன்னர் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் கூற்றுப் பற்றிய சாட்சியம் எதுவும் நீதிமன்றம் எதிலும் ஏதேனும் வழக்கில், குற்ற வழக்கில் அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையில் அவ்வாளுக்கெதிராக அனுமதிக்கப்படற்பாலதாதல் ஆகாது :

ஆயின், இவ்வுட்பிரிவின் மூற்போந்த ஏற்பாடுகளில் உள்ளதெதுவும்—

(அ) இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறிற்காக ஏதேனும் குற்றவழக்குத் தொடர்தலை அல்லது தண்டம் அளித்தலை பாதித்தலாகாது அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதல் அல்லது கொள்ளப்படுதல் ஆகாது;

(ஆ) தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறிற்காக எவரேனும் சாட்சிக்கெதிராக குற்றவழக்குத் தொடரும் நோக்கங்களுக்காக ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கின்ற எவரேனும் சாட்சியின் பெயரை அல்லது சான்றை அல்லது சான்றின் ஏதேனும் பாகத்தை வெளியிடுதலை அல்லது வெளிவிடுதலைத் தடுத்தலாகாது அல்லது தடுப்பதாகக் கருதப்படுதல் அல்லது பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

20. (1) அழைப்புக்கட்டளை ஒவ்வொன்றும் ஆணைக்குழுவின் தவிசாளரின் கைப்பட்டதாக இருத்தல் வேண்டும். அழைப்புக் கட்டளைகள் சேர்ப்பித்தல்.

(2) அழைப்புக் கட்டளை எதுவும் அதன் கண் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அதனை ஒப்படைப்பதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம் அல்லது அது நடைமுறைச் சாத்தியமற்றதாக இருக்குமிடத்து அவ்வாள் கடைசியாக வசித்ததாக அறியப்படும் இடத்தில் அதனை விட்டுவைப்பதன் மூலம் அல்லது பதிவஞ்சல் மூலம் சேர்ப்பிக்கலாம்.

(3) அழைப்புக்கட்டளை ஒன்று சேர்ப்பிக்கப்பட்டவரான ஒவ்வோராளும் அதில் கூறப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழு முன் சமுகமளித்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவினால் அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளித்தல் வேண்டும் அல்லது அழைப்புக் கட்டளையின் தாற்பரியத்துக்கிணங்க தமது உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ளவையும் அவரிடமிருந்து தேவைப்படுத்தப்பட்டவையுமான அத்தகைய ஆவணங்களை அல்லது வேறு பொருட்களைக் காண்பித்தலும் வேண்டும்.

அவமதிப்புக்கான தண்டனை.

21. (1) ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும், உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு என்றாற்போன்று உயர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு தவறையும் விளங்குவதற்கான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு இத்தால் உரித்தாக்கவும் படுகின்றது.

(2) ஆணைக்குழுவின் முன்னிலையிலாயினுஞ்சரி, அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி, ஆணைக்குழு தொடர்பாகப் புரியப்பட்ட ஒரு செயல் அல்லது செய்யாமை, அத்தகைய செயல் உயர் நீதிமன்றம் தொடர்பாகப் புரியப்பட்டால் அல்லது புரியாது விட்டுவிடப்பட்டால், அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிரான அல்லது அதற்கு அவமரியாதையான அவமதிப்புத் தவறாக அமைந்திருக்குமெனில், ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அவமரியாதையான அவமதிப்புத் தவறாக அமைதல் வேண்டும்.

(3) எவரேனுமாள்—

(அ) இச்சட்டத்தின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்புக் கட்டளையொன்றில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவிற்கு முன்னர் தோன்றுவதற்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றித் தவறினால்; அல்லது

(ஆ) சத்தியஞ் செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுத்தால் அல்லது உரியமுறையில் சத்தியஞ்செய்து அல்லது உறுதியுரை மொழிந்து, ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள, ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அல்லது புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருமங்கள் குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி எதற்கும் மறுமொழியிறுப்பதற்கு காரணமின்றி மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(இ) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள ஆணைக்குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஓர் அறிவித்தலின் அல்லது எழுத்திலான கட்டளையின் அல்லது பணிப்புரையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு காரணமின்றி மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டு, ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அல்லது புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருமங்களின் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு அவசியமாகவுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை ஆணைக்குழுவிற்குக் காண்பிப்பதற்கும் சாட்டுவதற்கும் காரணமின்றி மறுத்தால் அல்லது தவறினால்,

அத்தகைய ஆள் ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழு (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் அதிகாரத்திற்கெதிராக அல்லது அவமரியாதையாக ஏதேனும் அவமதிப்புத் தவறுக்கு ஆளொருவர் குற்றவாளியெனத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய தீர்மானத்தை எடுத்துக்காட்டும் சான்றிதழொன்றை உயர் நீதிமன்றத்திற்கு ஆணைக்குழு அனுப்புதல் வேண்டும்; அத்தகைய சான்றிதழ் ஒவ்வொன்றும் ஆணைக்குழுவின் தவிசாளரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உயர் நீதிமன்றம் அதன் கவனத்துக்குட்படுத்தத்தக்கதென எண்ணும் அவமதிப்புத் தவறுக்கான தண்டனைக்கான வழக்கு நடவடிக்கை எதிலும் (4) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்பமிடப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட சான்றிதழ் ஒன்றெனக் கொள்ளப்படுகின்ற ஆவணம் எதுவும்—

(அ) சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மூரணானது என எண்பிக்கப்பட்டாலன்றி, மேலும் எண்பிப்பில்லாது அத்தகைய சான்றிதழாகக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) அந்தச் சான்றிதழில் எடுத்துக்காட்டப்பட்ட தீர்மானம் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டது என்பதற்கும் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கும் சான்றாதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் அவமதிப்புத் தவறைத் தண்டிப்பதற்கென இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக எடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் எவற்றிலும், ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும், அவரது சம்மதத்துடன் தவிரவும் அத்துடன் இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு சாட்சிக்காரராகக் கட்டளையிட்டழைக்கப்படுதலோ அல்லது பரிசீலனை செய்யப்படுதலோ ஆகாது.

## பாகம் III

### ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி

ஆணைக்குழு வின் பணியாட் டொகுதியினரை நியமித்தல்.

**22.** (1) ஆணைக்குழுவிற்குச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுதலில் ஆணைக்குழுவிற்கு உதவுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம்.

ஆணைக்குழு வின் உறுப் பினர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**23.** ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அத்துடன் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள், சேவையாளர்கள் என்போர், தண்டனைச் சட்டக்கோவையின், கருத்தெல்லைக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு விசாரணையும் அல்லது புலனாய்வும் அச்சட்டக் கோவையின் கருத்தெல்லைக்கு உட்பட நீதிமுறை நடவடிக்கையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

தத்துவங்களைக் கையளித்தல்.

**24.** ஆணைக் குழுவானது, அதன் தத்துவங்களுள் எதனையும், ஆணைக்குழுவிற்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம் என்பதுடன் எந்த ஆளுக்கு, அத்தகைய தத்துவங்கள் அவ்வாறு கையளிக்கப்பட்டனவோ அந்த ஆள், ஆணைக்குழுவின் பணிப்புரைகளுக்கு அமைவாக, அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

பகிரங்க அலுவலர்களை ஆணைக்குழு வின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்.

**25.** (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்று சம்மதத்துடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு, தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை புரிவதற்கு உடன்பட்டுள்ள ஆள் ஒருவரை ஆணைக்குழு தொழிலுக்கமர்த்துமிடத்து அந்த ஆளினால் ஆணைக்குழுவுக்குப் புரியப்படும் சேவைக்காலப்பகுதியெதுவும் அத்தகைய உடன்படிக்கையின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

வழக்குகளுக்கான பாதுகாப்பு.

26. (1) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரொருவரால் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் அல்லது ஏதேனும் வேறுவகையில் ஆணைக்குழுவுக்கு உதவுகின்ற எவரேனும் வேறு ஆளினால், அத்தகையாளரென்ற முறையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவமதிப்புத் தவறொன்றுக்காகத் தவிர, அத்தகைய உறுப்பினருக்கெதிராக அல்லது அலுவலருக்கெதிராக அல்லது சேவையாளருக்கெதிராக அல்லது வேறு ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் அல்லது சேவையாளரொருவர், அவமதிப்புக்கான வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்கு அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு அவசியமாகக்கூடியவாறு தவிர இச்சட்டத்தின் கீழான ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் ஏதேனும் விசாரணையின்போது அல்லது ஏதேனும் புலனாய்வின்போது ஆணைக்குழுவினால் பெறப்பட்ட ஆவணமெதனையும், ஏதேனும் நீதிமன்றத்தில் காண்பிக்கவோ அல்லது ஆணைக்குழுவின் அறிவுக்கு வரக்கூடிய ஏதேனும் கருமத்தை அல்லது பொருளை ஏதேனும் நீதிமன்றத்துக்கு வெளியிடவோ தேவைப்படுத்தப்படுதலாகாது.

(3) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் ஆணைக்குழுவின் உறுப்பினர் எவருக்குமெதிராக அல்லது அத்தகைய அறிக்கையில் பொருளளவில் உண்மையான விவரம் வேறெவரேனுமாளினால் வெளியிடப்பட்டமை தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

(4) ஏதேனும் நீதிமன்றத்தின் முன், ஆணைக்குழுவினால் அல்லது அதற்கு எதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் ஆணைக்குழுவினால் உறப்படும் எவையேனும் செலவுகள், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படும் அல்லது ஆணைக்குழுவினால் அறவிடப்படும் ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மீது ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரால் அல்லது அதன் எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவிசெய்வதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால், செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல்

தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் கொண்டுவரப் பட்ட ஏதேனும் நடவடிக்கையில் அல்லது வழக்குத் தொடுப்பில் உறப்படும் செலவு எதுவும், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதி மன்றம் கருதினால், அத்தகைய நடவடிக்கையில் அல்லது வழக்குத் தொடுப் பில் அவரினால் அத்தகைய செலவு அறவிடப்பட்டாலொழிய ஆணைக் குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஆணைக்குழு ஓர் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

27. ஆணைக்குழு இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என் பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

## பாகம் IV

## பொது

கைது முதலியவை பற்றி ஆணைக்குழு வுக்கு அறிவிக் கும் கடமையும் தகவலைப் பெறுவதற்கும் சோதனை செய்வதற்கும் ஆணைக்குழு வுக்குள்ள தத்துவமும்

28. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடு) சட்டத் தின்கீழ் அல்லது 40 ஆம் அத்தியாயமான பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஓர் ஆள் கைது செய்யப்படுமிடத்து அல்லது தடுத்துவைக்கப்படுமிடத்து ; விடயத்துக்கேற்ப அத்தகைய கைது செய் யப்பட்ட அல்லது தடுத்து வைத்தல் பற்றியும் அவ்வாறு கைது செய்யப் பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட ஆள் கட்டுக்காப்பில் அல்லது தடுத்து வைத்திருக்கும் இடம்பற்றியும் உடனடியாக அத்துடன் எவ் விடயத்திலும் அவ்வாறு கைதுசெய்த அல்லது தடுத்துவைத்த நேரத்தி லிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல், ஆணைக் குழுவுக்கு அறிவித்தல் விடயத்துக்கேற்ப அத்தகைய கைதை அல்லது தடுப்புக் கட்டளையைச் செய்கின்ற ஆளின் கடமையாதல் வேண்டும். அவ் வாறு கட்டுக்காவலில் அல்லது தடுத்து வைத்திருக்கப்படும் ஓர் ஆள் விடு விக்கப்படுமிடத்து அல்லது வேறு தடுத்து வைக்கப்படுமிடத்திற்கு இட மாற்றப்படுமிடத்து விடயத்துக்கேற்ப அத்தகைய விடுவிப்பு பற்றி அல் லது இடமாற்றம் பற்றிய ஆணைக்குழுவுக்கு அறிவித்தல், அத்துடன் ஓர் இடமாற்ற விடயத்தில், தடுத்து வைக்கப்படும் புதிய இடத்தின் அமைவு பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் விடயத்துக்கேற்ப அத்தகைய விடு விப்பதற்கான அல்லது இடமாற்றத்துக்கான கட்டளையைச் செய்கின்ற ஆளின் கடமையாதல் வேண்டும்.

(2) எழுத்து மூலம் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவ ரேனும் ஆள், நீதித்துறை கட்டளை ஒன்றினால் அல்லது வேறுவகையில் எவரேனும் ஆள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் தடுத்து வைக் கப்படும் இடத்தினுள், பொலிஸ் நிலையத்தினுள், மறியற்சாலையினுள் அல்லது வேறு ஏதேனும் இடத்தினுள் அங்கு தடுத்து வைத்திருக்கப்படும் ஆட்களின் தடுத்துவைத்தல் பற்றிய நிலைமைகளைக் கண்டறிவதற்கு அவசியமாகக்கூடியவாறான, அத்தகைய விசாரணையை அதனுள் காணப்படும் எவரேனும் ஆளிடமிருந்து செய்யலாம் அல்லது அதன்கண் அத்தகைய பரிசோதனைகளைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் கடமையொன்று சுமத்தப்பெற்றுள்ளவரும் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேண்டுமென்றே ஆணையாளருக்கு அறிவிக்காதிருக்கின்றவருமான எவரேனும் ஆள், அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரை அவ்வுட்பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை அந்த அலுவலர் பிரயோகிப்பதை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஒரு நீதிவானால் சுருக்கவிசாரணை செய்யப்பட்டதன் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஓர் ஆண்டை விஞ்சாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் நிதியம்.

29. (1) இச்சட்டத்தினால் ஆணைக்குழுவிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழுவை இயலச்செய்யும் முகமாக போதிய நிதியத்தை அரசு ஆணைக்குழுவிற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு அதன் வரவு செலவு அதனுடன் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன பற்றி முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(4) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை ஆணைக்குழுவின் கணக்காய்விற்கும் கணக்குகளுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

ஆணைக்குழு அறிக்கை விடுதல்.

30. ஆணைக்குழு, அறிக்கை எந்த ஆண்டு தொடர்பாகவுள்ளதோ அந்த ஆண்டுக் காலத்தின்போதான அதன் சகல செயற்பாடுகளும் பற்றிய ஓர் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எல்லா விடயங்களின் நிரல் ஒன்றும், ஒவ்வொரு விடயம் தொடர்பில் ஆணைக்குழுவின் விதப்புரைகளுடன், அவை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் அதில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆணைக்குழுவானது, அவ்வாறு செய்வது அவசியமானதென அது கருதுகின்ற போதெல்லாம், அதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் குறிப்பிட்ட கருமம் அல்லது கருமங்கள் தொடர்பிலும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைபற்றியும் பாராளுமன்றத்திற்குக் காலாந்தர அல்லது விசேட அறிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம்.

ஒழுங்குவிதிகள்.

31. (1) அமைச்சரானவர் இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றைப் பயனுறுத்தும் நோக்கத்திற்கு அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் அல்லது இச்சட்டத்தினால் அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி இச்சட்டத்தின்கீழ் புலனாய்வுகளை நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைகளை விதித்துரைத்து அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில், அது வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதியானது அவ்வாறு இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவித்தலானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

32. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

33. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"அடிப்படை உரிமை" என்பது அரசியலமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டு நன்கு மதிக்கப்படும் ஓர் அடிப்படையுரிமை என்று பொருள்படும்.

"நிறுவனத் தலைவர்" — என்பது

(அ) ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் சேவையாற்றும் ஒரு பகிரங்க அலுவலர் தொடர்பில் அத்திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும் அல்லது அத்தகைய பகிரங்க அலுவலர் அத்திணைக்களத்தின் தலைவராக இருக்குமிடத்து அத்திணைக்களம் எந்த அமைச்சிற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்;

(ஆ) அமைச்சில் சேவைசெய்யும் ஒரு பகிரங்க அலுவலர் தொடர்பில் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும் அல்லது அத்தகைய பகிரங்க அலுவலர் ஒரு செயலாளராக இருக்குமிடத்து அவ்வமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் எனப் பொருள்படும்;

(இ) ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் தொடர்பில் அரசியலமைப்பின் 112 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட நீதித்துறை சேவை ஆணைக்குழு எனப் பொருள்படும்;

(ஈ) வேறு எவரேனும் பகிரங்க அலுவலர் தொடர்பில் எந்த பிரதான நிறைவேற்று அலுவலரின் பொதுப் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் பகிரங்க அலுவலர் சேவை செய்கின்றனரோ அந்த பிரதான நிறைவேற்று அலுவலர் எனப் பொருள்படும் ;

(உ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் உள்ளூராதிகார சபையின் அல்லது வேறு அது போன்ற நிறுவனத்தின் ஓர் அலுவலர் தொடர்பில் அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், உள்ளூராதிகார சபையின் அல்லது அதுபோன்ற வேறு நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் எனப் பொருள்படும் அல்லது அத்தகைய அலுவலர் அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், உள்ளூராதிகார சபையின் அல்லது நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருக்குமிடத்து அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் உள்ளூராதிகார சபை அல்லது நிறுவனம் எந்த அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றதோ அந்த அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்;

"மனித உரிமை" என்பது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசப் பொருத்தனையினாலும் பொருளாதார, சமூகப் பண்பாட்டு உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனையினாலும் வெளிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஓர் உரிமை எனப் பொருள்படும்;

"நிறுவனம்" என்பது ஒரு அரசாங்கத் திணைக்களத்தையும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் நியதிச் சட்டமுறையான சபையை அல்லது ஆணைக்குழுவையும் உள்ளூராதிகார சபையையும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சியையும் அவற்றின் பெரும்பாலான பங்குகளை அரசாங்கம் வைத்திருக்கும் ஒரு கம்பெனியையும் உள்ளடக்கும்.

"உள்ளூராதிகார சபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட புரியப்பட்ட நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் சமமான அல்லது அவற்றோடு நேரொத்த தத்துவங்களை, கடமைகளைப் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்குகின்றது.

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது கொடைமூலம், கடன்மூலம் அல்லது வேறுவிதமாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளைக் கொண்டு அல்லது மூலதனத்தைக் கொண்டு கம்பனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த, எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்